2013 ஏப்ரல் 1]

தகவல் என்னவென்றால், அதிகமாக உரம் உற்பத்தி செய்தால், ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த உரத்தினைப் பயன்படுத்த முடியாது; அது கெட்டியாகிவிடும். விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாது. எனவே, விவசாயக் காலங்களுக்குத் தேவையான அளவு மட்டுமே இந்த ஆலையில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதல் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

புதிய பாலம்

***7021—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், நகலூர் செட்டில்மெண்ட் கிராமத்திற்கு வனத் துறையின்மூலம் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், நகலூர் செட்டில்மென்ட் கிராமத்திற்கு இந்த நிதியாண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று வனத் துறையின்மூலம் பாலம் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.*

திரு. பி.எல். சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறை செட்டில்மென்ட் பகுதியில் உடனடியாகப் பாலம் அமைக்கப்படும் என்று சொன்னதற்கு மிக்க மகிழ்ச்சியோடு நன்றியைத்*

தெரிவித்துக்கொள்கின்றேன். நகலூர் கிராமம் ஒரு வன செட்டில்மென்ட் பகுதியாகும். இங்கு சுமார் 100 குடும்பங்களும், 250 ஏக்கர் விளைநிலமும் உள்ளது. இந்தக் கிராமத்திற்குச் செல்ல ஒரே வழிதான் இருக்கிறது. இந்தப் பாதையின் குறுக்கே காட்டாறு ஓடுகிறது. இந்தக் காட்டாற்றின் குறுக்கே ஒரு பாலத்தை வனத் துறையின் பொறியியல் பிரிவு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கட்டியது. அந்தப் பாலம் போதுமான தரமில்லாத காரணத்தினால், அடித்துச் செல்லப்பட்டது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மண்டலம், சத்தியமங்கலம் வனக் கோட்டம், ஆசனூர் வனச் சரகத்திற்குட்பட்ட நகலூர் செட்டில்மென்ட், கரைநிலத்திலிருந்து நகலூர் செல்லும் சுமார் 3 கிலோ மீட்டர் தார்ச் சாலை உள்ளது. இச்சாலையில் கச்சம் பாளையம் என்ற இடத்தில் ஏற்கெனவே இருந்த தரைப்பாலம் மழை வெள்ளத்தினால் முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டு சேதம் அடைந்துள்ளது. இங்கு புதிதாகப் பாலம் கட்டுவதற்குச் சுமார் 20 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நகலூர் செட்டில்மென்ட் கிராமம், சத்தியமங்கலம் வன உயிரின சரணாலயத்திற்குட்பட்டு வருகிறது. தற்போது சத்தியமங்கலம் வன உயிரின சரணாலயம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகமாக அறிவிக்கை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கையில் நகலூர் செட்டில்மென்ட் கிராமத்திற்குப் புலிகள் காப்பகப் பகுதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தப் பாலப் பணியைத் தொடங்கிட முயற்சியை மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

2013 ஏப்ரல் 1]

முற்பகல் 10—30

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழ்நாடு வன விலங்கியல் வாரியம் அமைக்கப்படாமல் இருக்கிறது. அந்த வாரியம் அமைக்கப்படாததால், நமக்கு விரைவாக மின்சாரம் வழங்கக்கூடிய மூன்று அனல் மின் திட்டங்கள் நிறைவேறத் தடையாக இருக்கிறது. இந்த வன விலங்கியல் வாரியம் விரைவில் அமைக்கப்பெறவும், மத்திய வாரியத்திடமிருந்து அந்த மூன்று மின் திட்டங்களுக்கான அனுமதி கிடைக்கப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

புறவழிச் சாலை

***6578—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் நகரம் மாநில நெடுஞ்சாலையில் (SH29) *புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?